**செய்தி வெளியீடு எண் : 1412** **நாள் : 17.07.2023**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு.**

..................

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் 16.07.2023 அன்று இரவு திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, வேலூர் மாவட்டம், காட்பாடி, இருங்கூரைச் சேர்ந்த பாம்புக்கடியால் பாதிக்கப்பட்ட திரு.லட்சுமணன், இதயநோயால் பாதிக்கப்பட்ட சேனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.புண்ணியகோடி உட்பட அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்த நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்களைச் சந்தித்து நலம் விசாரித்தார். மேலும், மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வருவோருக்கு தமிழ்நாடு அரசின் முன்னோடி மருத்துவத் திட்டமான "இன்னுயிர் காப்போம் – நம்மை காக்கும் 48 திட்டத்தின்" கீழ் முறையாக சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பின்னர், மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவப் பிரிவு மற்றும் பச்சிளங்குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுகளை ஆய்வு செய்து தாய்மார்கள் – பச்சிளங்குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து அங்கிருந்த மருத்துவப் பணியாளர்களிடம் கேட்டறிந்து, பிரசவம் உள்ளிட்ட அவசர சிகிச்சைகளுக்காக இரவு நேரங்களில் வரும் பொதுமக்கள் வருகிற போது விழிப்புடன் இருந்து சரியான முறையில் சிகிச்சையளிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

மேலும், மருத்துவமனையின் இரத்த வங்கியின் செயல்பாடு குறித்து கேட்டறிந்து, அரிய வகை இரத்தம் கொண்ட கொடையாளர்கள் விவரம் அடங்கிய பதிவேட்டை முறையாக பராமரித்து, தேவையுள்ள பொதுமக்களுக்கு உதவிட வேண்டும் என அங்கிருந்த மருத்துவப் பணியாளர்களிடம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின் போது மக்களவை உறுப்பினர் திரு. து. மு.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.பி.நந்தகுமார், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in